RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-202




சிவகங்கை | மலர்-4 | இதழ்-39 | 09 பிப்ரவரி ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



சிவகங்கை மாவட்டம் காஞ்சிரங்கால் ஊராட்சி ஒன்றியம் திருப்பத்தூர் சாலையில் 21ஆம் நூற்றாண்டு பள்ளி எதிரே தியாகி அரு சதாசிவம் தெருவில் அமைந்துள்ள அமைதி குடிலில் உள்ள கேட்ட வரம் தரும்

**ஸ்ரீ அம்மையப்ப விநாயகர் ஆலய நூதன மகா கும்பாபிஷேக விழா தை மாதம் 27 ஆம் நாள் 09.02.2025 ஞாயிற்றுக் கிழமை**

இன்று சிறப்பாக நடைபெற உள்ளது இவ்விழாவில்கலந்து கொள்ளவிருக்கும் பொதுமக்கள் மற்றும் பக்த கோடிகளை வருகை ! வருக ! என அனைவரையும் வரவேற்று மகிழ்கிறோம்

இவண் :

**மாலை தந்தி நாளிதழ் நிர்வாகம்**
அன்புடன் அழைத்து மகிழும்

மற்றும்

**அமைதிக்குடிலில் விழா குழுவினர்**
மற்றும் திரைப்பட இயக்குனர்
**நந்தகுமார்-விஜயஸ்ரீ**
சென்னை தொழில் அதிபர் **மணிக்குமார் கௌளி** சென்னை

சிவமயம்

ஸ்ரீ காரார் உடையவர் துணை !
ஸ்ரீ கிணத்தடி காளியம்மன் துணை !!

## கேட்ட வரம் தரும் ஸ்ரீ அம்மையப்ப விநாயகர் துணை



**ஸ்ரீ விநாயகர் துதி**

"தந்தை தாயை கையில் ஏந்தி
தவமிருந்து பூஜை செய்யும்
கற்பகமே நின் புகழ் பாடி
காண வரும் பக்தர் குறைகள்
தீர்த்து வைப்பாய் கணநாதா"

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகர், திருப்பத்தூர் ரோடு, காஞ்சிரங்கால் (21 ஆம் நூற்றாண்டு சர்வதேச பள்ளி எதிரில்). தியாகி அரு. சதாசிவம் தெருவில் அமைக்கப்பட்டுள்ள, அமைதிக்குடிலில் எழுந்தருளியிருக்கும் "கேட்ட வரம் தரும் ஸ்ரீ அம்மையப்ப விநாயகர்" ஆலய

## நூதன மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ்

பேரன்புடையீர் வணக்கம்!

ஆழி சூழ் இப்பூவுலகில் அருள் வளமும், பொருள் வளமும், நீர் வளமும், வீரமும் விவேகமும் நிறைந்த சிவகங்கையில் நிகழும் மங்களகரமான ஆண்டு ஸ்ரீ குரோதி வருஷம், தை மாதம் 27ஆம் நாள் 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை, திருவாதிரை நட்சத்திரம் துவாதசி திதி சித்த யோகமும் நிறைந்த மேஷலக்கின ஜெய வேளையும் கூடிய சுபயோக சுபதினத்தன்று காலை 10:00 மணிக்கு மேல் 10:45 மணிக்குள், "கேட்ட வரம் தரும் ஸ்ரீ அம்மையப்ப விநாயகருக்கு திருக்குட நன்னீராட்டு பெரும் சாந்தி பெருவிழா மகா கும்பாபிஷேகம்" நடைபெற உள்ளது ஆன்மிக அன்பர்களும் சிவநேசச் செல்வர்களும் தவறாது கலந்து கொண்டு புண்ணிய தீர்த்தமும் அய்யனின் அருள் பிரசாதமும் பெற்று நன்மையடைய வேண்டுகிறோம்.

அன்புடன் அழைத்து மகிழும்,
விழா குழுவினர்,
அமைதிக்குடில், சிவகங்கை.
94431 05715, 90809 55235

சென்னை
98410 55678
99405 51312

## மேலநெட்டூர் அரசு உயர் நிலைப் பள்ளியில் ஆண்டு விழா



மானாமதுரை பிப்.9

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட மேலநெட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

பள்ளி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளுடன் ஆண்டு விழா தொடங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக பள்ளி பிடி ஏ தலைவர் காசிராஜன் எஸ் எம் சி தலைவர் ராஜாத்தி மேலநெட்டூர் கிராமதலைவர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் வரவேற்புரையாக அறிவியல் ஆசிரியர் வாசுகி தலைமை உரையாக முதன்மை கல்வி அலுவலர் பாலமுத்து முன்னிலையாக மாரிமுத்து மாவட்ட கல்வி அலுவலர் ஆண்டறிக்கை தலைமையாசிரியர் (பொறுப்பு) சோ. பாலகிருஷ்ணன் வாழ்த்துரை முத்துப்பாண்டி தலைமை ஆசிரியர் கீழக்கண்டனி, யோகராணி பூவந்தி தலைமையாசிரியர் ஆறுமுகம் மூங்கில்ஊரனி தலைமை ஆசிரியர் சீலியா ஸ்கெல்சின் பூவந்தி தலைமையாசிரியர் அலெக்ஸ் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் மேலநெட்டூர் நிகழ்ச்சி தொகுப்பாளராக ஆங்கில ஆசிரியர் திவ்யா நன்றியுரை முருகேசன் சமூக அறிவியல் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர் மற்றும் முன்னாள் மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டது தற்போதைய அனைத்து வகுப்பிலும் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு பரிசையும் வழங்கி கௌரவிக்கப்பட்டது மேலும் ஒவ்வொரு வகுப்பிலும் பள்ளிக்கு 100% வருகை புரிந்த மாணவர்களுக்கும் பரிசு வழங்கப்பட்டது

பெற்றோர்கள் மாணவ மாணவிகள் முன்னாள் மாணவர்கள் கிராம பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு ஆண்டு விழாவை சிறப்பித்தனர்.







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாரத ஸ்டேட் வங்கியில் கோட்டை அம்மாள் என்பவர் 19 லட்சம் மதிப்பிலான போலி நகைகளை அடகு வைத்ததாக வங்கியின் மேலாளர் அளித்த புகாரின் பேரில் நகைகளை அடகு வைத்த கோட்டையம்மாள் அவரது மகள் ஈஸ்வரி மற்றும் ஜனார்த்தன் ஆகியோரை மானாமதுரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டேன்! நடிகர் சிவகார்த்திகேயன்

சென்னை, பிப்.9

நடிகர் சிவகார்த்திகேயன் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை நிறுத்தியதில் இருந்து தெளிவான முடிவுகளை எடுக்கிறேன் என்றார்..



நடிகர் சிவகார்த்திகேயன் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட போது சுவாரஸ்யமான தகவல் ஒன்றை பகிர்ந்து கொண்டார். அதாவது, கடந்த இரண்டு வருடங்களாகவே நான் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை நிறுத்தி விட்டேன். அவ்வாறு நிறுத்தி விட்டதால் எனக்கு நல்ல விதமான தெளிவு கிடைத்திருக்கிறது.

தற்போது எல்லாம் சமூக வலைதளங்களில் அவர் அவர் தங்களின் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். அதனால் சரியான முடிவுகளை என்னால் எடுக்க முடியவில்லை. நான் குழம்பி விடுகிறேன். தற்போது சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை நிறுத்தியதில் இருந்து யோசித்து நான் தெளிவான முடிவுகளை எடுக்கிறேன்" என்று கூறினார்.

## சிவகங்கை இலுப்பைக்குடி கிராமத்தில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் நாட்டுநலப்பணி திட்ட சிறப்பு முகாம்





சிவகங்கை, பிப்.9

சிவகங்கை மாவட்டம் இலுப்பைக்குடி கிராமத்தில் 28.01.2025 முதல் 03.02.2025 வரை ஏழு நாட்கள் நடைபெற்றது.







அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமியின் வழிகாட்டுதலில் நடைபெற்ற இச்சிறப்பு முகாமில், கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்று இலுப்பைக்குடி கிராமத்தில் உள்ள முனீஸ்வரர் கோவில், தண்ணீர் பந்தல் ஊரணி மற்றும் அரசுப் பள்ளி வளாகம் போன்ற இடங்களில் தூய்மைப் பணி மேற்கொண்டனர். மாலை நேரங்களில், மாணவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் யோகா பற்றிய விழிப்புணர்வு சொற்பொழிவுகள் நடத்தப் பெற்றன. கல்லூரியின் நாட்டுநலப்பணி திட்ட அலுவலர்கள் முனைவர் சுந்தரி, முனைவர் தெய்வமணி, முனைவர் செந்தில்குமார் மற்றும் முனைவர் லட்சுமணக்குமார் ஆகியோர் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைந்து நடத்தினர்.

## பழனியில் 50லட்சம் ரூபாய் மதிப்பில் சிசிடிவி கேமராக்கள் கண்காணிப்பு அறையை துவக்கி வைத்த உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி

பழனி பிப்.9

திண்டுக்கல் மாவட்டம் பழனி கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். மேலும் கோவை, ஈரோடு, மதுரை ஆகியவற்றை இணைக்கும் முக்கிய நகரமாகவும் விளங்குவதால் நாள்தோறும் ஏராளமான வெளியூர் மக்களும் பழனி மார்க்கமாக வந்து செல்கின்றனர். இதனால் பழனி பேருந்துநிலையம், ரயில்நிலையம் மற்றும் அடிவாரம் பகுதிகளில் எந்நேரமும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கூட்டம் அதிகளவில் காணப்படுகிறது. இதன்காரணமாக பழனி நகரில் குற்றச்சம்பங்களும் அதிகளவில் நடைபெறுகிறது. எனவே குற்றச்சம்பவங்கள் குறித்து விசாரிக்கவும், குற்றச்சம்பவங்கள் நிகழாத வண்ணம் கட்டுப்படுத்தவும் சிசிடிவி எனப்படும் கண்காணிப்பு காமிராக்கள் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 லட்சம் ரூபாய் செலவில் பழனி நகர் முழுவதும் உள்ள பல்வேறு சாலைகள், சாலை சந்திப்புகள் மற்றும் முக்கிய இடங்களில் 300க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டது. இந்தக் கண்காணிப்பு காமிராக்களை ஒருங்கிணைத்து கண்காணிக்கும் வகையில் பழனி நகர் காவல் நிலையத்தில் கண்காணிப்பு அறையும் அமைக்கப்பட்டுள்ளது. கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் கண்காணிப்பு அறை ஆகியவற்றை இன்று துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக உணவு மற்றும் உணவுப்பொருள் வளங்கள் துறை அமைச்சர் சக்கரபாணி பங்கேற்று கேமரா கண்காணிப்பு அறையை துவக்கி வைத்தார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் மற்றும் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பிரதீப், பழனி டிஎஸ்பி தனஞ்ஜெயன், பழனி நகர காவல் ஆய்வாளர் மணிமாறன் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.









திருநெல்வேலி மாவட்டத்தில் புதிய மாவட்ட ஆட்சியராக டாக்டர் சுகுமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## மதுரை கூடல்நகரில் தத்ரூபமாக நடைபெற்ற ரயில் விபத்து மீட்பு பணி!









மதுரை பிப்.9

மதுரை மாவட்டம் கூடல்நகரில் ரயில் விபத்து மீட்பு பணியில் ஈடுபடுவது எப்படி என தேசிய பேரிடர் மேலாண்மை மீட்பு படையினர் தத்ரூபமாக ஒத்திகை மேற்கொண்டனர். தேசிய பேரிடர் மீட்பு படை சார்பில், மதுரை மாவட்டம் கூடல் நகர் ரயில் நிலையத்தில் ரயில் விபத்து ஏற்பட்டது போலவும் அதிலிருந்து பயணிகளை பாதுகாப்பாக எப்படி மீட்பது! அவசர சிகிச்சை அளிப்பது போலவும் மேலும் இரயில் பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதிய பெட்டிகளை அகற்றுதல், பெட்டிகளில் சிக்கிக் கொண்ட பயணிகளை பத்திரமாக மீட்பது, ரயில்வே தண்டவாள சீரமைப்பு பணிகள் போன்ற மீட்பு பணி ஒத்திகைகள் நடைபெற்றன.

மேலும் ரயில்வே தண்டவாளத்தில் வெடிகுண்டு ஆய்வு நிபுணர்கள் விபத்துக்கான காரணம் குறித்து ஆய்வு செய்வதும் ரயில்வே தண்டவாளத்தில் வெடிகுண்டு பொருட்கள் ஏதும் இருக்கிறதா? என்பது குறித்து மோப்பநாய் உதவியுடன் சோதனை நடத்துவது போன்றும் ஒத்திகை நடைபெற்றது.

ரயில் விபத்தில் சிக்கிய பயணிகளுக்கு அவசர சிகிச்சை அளித்து அவர்களை 20க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் கள் மூலமாக மருத்துவமனைகளுக்கு அழைத்து செல்வது போலவும், விபத்துக்குள்ளான இடத்தில் உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு தற்காலிக அறை அமைப்பது குறித்தும் ஒத்திகை நடைபெற்றது. விபத்துக்குள்ளான ரயில் பெட்டிகளில் இருந்து தேசிய மீட்பு படையினர் கயிறுகள் மூலமாகவும் ஏணிகளை பயன்படுத்தியும் அவசர வழியில் பயணிகளை மீட்பது உள்ளிட்டவை குறித்தும் ஒத்திகை பார்க்கப்பட்டது. இந்தப் பயிற்சி ஒத்திகையில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நிஜத்தில் விபத்து நடந்து விட்டதோ என கருதி கூடல் நகர் பகுதியில் பாத்திமா கல்லூரி மேம்பாலம் அருகே ஏராளமான பொதுமக்கள் ஒரே நேரத்தில் குழுமியதால் அந்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்த ஒத்திகையின் போது தேசிய பேரிடர் மீட்பு படையினர், ரயில்வே பாதுகாப்பு படையினர், மருத்துவ குழுவினர், செஞ்சிலுவை சங்கத்தினர், தீயணைப்புபடையினர், மாவட்ட பேரிடர் மீட்புத் துறையினர், வருவாய்த் துறை அதிகாரிகள், காவல்துறையினர், மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் சரத் ஸ்ரீவஸ்தவா, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, கோட்டாட்சியர் என அனைத்து அதிகாரிகளும் ரயில் விபத்து குறித்து நேரடியாக ஆய்வு மேற்கொள்வது போன்ற ஒத்திகையும் நடைபெற்றது.

## சிவகங்கையில் குடற்புழு நீக்கம் மாத்திரை இலவசமாக வழங்கும் முகாம்கள்! மாவட்ட ஆட்சியர் தகவல்

சிவகங்கை பிப்.9

சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், கல்லூரிகள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வருகின்ற 10.02.2025 அன்று குடற்புழு நீக்கம் மாத்திரை (அல்பெண்டசோல்) இலவசமாக வழங்கும் முகாம்கள் நடைபெறவுள்ளது.

விடுபட்டவர்களுக்கான Mop up Day வருகின்ற 17.02.2025 அன்றும் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் தேசிய அளவிலான குடற்புழு நீக்க நாள் வருகின்ற 10.02.2025 அன்றும், விடுபட்டவர்களுக்கான Mop up Day வருகின்ற 17.02.2025 அன்றும் நடைபெற உள்ளது.



இத்திட்டத்தின் கீழ், ஒன்று முதல் பத்தொன்பது (119) வயதிற்குட்பட்ட அனைவருக்கும் மற்றும் இருபது முதல் முப்பது வயதிற்குட்பட்ட (2030) பெண்கள் (கர்ப்பிணி பெண்கள் மற்றும் தாய்ப்பால் ஊட்டும் பெண்கள் தவிர) அனைவருக்கும் அல்பெண்டசோல் (Albendazole) மாத்திரைகள் பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், கல்லூரிகள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

அதன்படி, மாவட்டத்திலுள்ள 1 முதல் 19 வயது வரை உள்ள 3,77,552 பயனாளிகளுக்கும், 2030 வயது வரை உள்ள 87,625 பெண்களுக்கும் என மொத்தம் 4,65,177 பயனாளிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

மேலும், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவ மாணவியர்களுக்கும், பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு வீடுகள்தோறும் சென்று இம்மாத்திரை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இம்முகாமில் 210 கிராம சுகாதார செவிலியர்கள், 17 ஆஷா பணியாளர்கள், 1,295 அங்கன்வாடி பணியாளர்கள், 1,665 பள்ளி மற்றும் கல்லூரி பொறுப்பு ஆசிரியர்கள் (Nodal Teachers) மற்றும் தலைமை ஆசிரியர்கள் மூலமாக அல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாத்திரைகள் உட்கொள்வதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், கல்வித்திறன் அதிகரிக்கவும் உதவியாகும் அமையும்.

எனவே, தேசிய குடற்புழு நீக்க முகாமில் அனைத்து 119 வயது மற்றும் 2030 வயதிற்குட்பட்ட பெண்கள் கலந்து கொண்டு அல்பெண்டசோல் (குடற்புழு நீக்கம் மாத்திரை) மாத்திரைகளை உட்கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## இராமநாதபுரம் தாதனேந்தல் கிராமத்தில் அவசர கால ஒத்திகை பயிற்சி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு முகாம்



இராமநாதபுரம், பிப்.9

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், தாதனேந்தல் கிராமத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் தென்மண்டல குழாய் வழிப்பாதை இராமநாதபுரம் கம்ப்ரசர் ஸ்டேஷன் சார்பாக அவசர கால ஒத்திகை பயிற்சி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி வரை இயற்கை எரிவாயுவை பைப்லைன் வழியாக இந்தியன் ஆயில் நிறுவனம் கொண்டு செல்கிறது. இது சென்னை எண்ணூரிலிருந்து தூத்துக்குடி வரை பைப் லைன் மூலம் எரிவாயுவை கொண்டு செல்லும் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த பைப் லைன் மூலம் கொண்டு செல்லப்படும் எரிவாயுவானது வீட்டு உபயோகத்திற்கும், வாகன எரிபொருளாகவும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுகிறது. இயற்கை எரிவாயு செல்லும் பைப் லைன்களில் கசிவு ஏற்பட்டால் அதனை எவ்வாறு சரிசெய்வது என்பது குறித்து இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இராமநாதபுரத்தின் முதன்மை மேலாளர் சிவகுருநாதன் மற்றும் மதுரை முனைய மேலாளர் சுந்தர் அவர்களும் விளக்கிக் கூறினார்கள்.

ஏர்வாடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை சார்பில் தீ விபத்துக்களை எவ்வாறு கையாள வேண்டும், எவ்வாறு தீயை அணைக்க வேண்டும் என்று செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. காயம் மற்றும் விபத்து ஏற்பட்டால் எவ்வாறு முதலுதவி செய்வது என்பது குறித்து மருத்துவர் பிரகதீஸ்வரன் மற்றும் மருத்துவத்துறையினர் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவசர கால உதவி மற்றும் கட்டணமில்லா தொலைப்பேசி சேவை குறித்து இந்தியன் ஆயில் அலுவலர்கள் விளக்கிக் கூறினார்கள்.

இந்த பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் இராஜமனோகரன் ஏர்வாடி தீயணைப்புத்துறை நிலைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரி உரக்கிடங்கில் திடீர் தீ அணைக்கும் பணியை மேற்கொள்ள விரைந்து ஆட்சியர் அறிவுறுத்தல்



கன்னியாகுமரி, பிப்.9

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரி உரங்கிடங்கில் ஏற்பட்ட திடீர் தீயினை அணைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக நிறுவங்கள், உணவகங்கள் உள்ளிட்டவைகளில் ஒவ்வொரு நாளும் டன் கணக்கில் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகள் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளை பகுதியில் உள்ள குப்பை கிடங்கில் கொட்டப்படுகிறது. இந்த குப்பை கிடங்கில் திடீரென ஏற்பட்ட திடீர் தீயினால் அந்தப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

மேலும் தீ பரவாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட தீயணைப்பு அலுவலருடன் ஆலோசனை நடத்தப்பட்டது. தொடர்ந்து குப்பை கிடங்கில் தீ பிடிக்காமலிருக்க தேவையான உபகரணங்கள் வாங்க நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாவட்ட தீயணைப்பு அலுவலர், தீயணைப்பு பணியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## மதுரை மாநகராட்சி வண்டியூர் கண்மாய் அழகுப்படுத்துதல் மேம்படுத்துதல் பணிகளை ஆய்வு செய்த மேயர்



மதுரை, பிப்.9

மதுரை மாநகராட்சி வண்டியூர் கண்மாயினை அழகுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆணையாளர் சித்ரா விஜயன், ஆகியோர் இன்று (08.02.2025) ஆய்வு மேற்கொண்டனர்.

மதுரை மாநகராட்சி வண்டியூர் கண்மாயினை அழகுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்காக அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் ரூ.50 கோடி மதிப்பீட்டில் கண்மாயின் படுகையை பலப்படுத்தவும், கண்மாயில் பசுமைவாரி வசதிகள் ஏற்படுத்துதல், கண்மாயின் மேற்குப்புறம் மற்றும் வடபுறத்தில் இருசக்கர மிதிவண்டி பாதை அமைத்தல், நடைபயிற்சி பாதை அமைத்தல், யோகா மையம், தியான மையம், சிற்றுண்டி, சிறிய நூலகம், குழந்தைகள் மற்றும் முதியோர் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய விளையாட்டு உபகரணங்கள், செயற்கை நீருற்று, ஆம்பி தியேட்டர், ஸ்கேட்டிங் தளம், கராத்தே பயிற்சி மையம், இறகு பந்து மைதானம், வாகன நிறுத்துமிடம், நவீன கழிப்பிடம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பூங்காக்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைப்பதற்கு நடைபெற்று வரும் பணிகளை மேயர், ஆணையாளர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து மதுரை மாநகராட்சி வார்டு எண்.33 மாட்டுத்தாவணி அருகில் ரூ.10.30 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வெங்காய மார்க்கெட் கட்டுமான பணிகளை மேயர். ஆணையாளர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்து ஆய்வின் போது நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள். இந்த ஆய்வின்போது மண்டலத் தலைவர் வாசுகி, சரவண புவனேஸ்வரி.பாண்டிச்செல்வி, உதவி ஆணையாளர் மணியன், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், செயற்பொறியாளர் சேகர், உதவிசெயற் பொறியாளர்கள் ஆரோக்கியசேவியர், காமராஜ், உதவிப்பொறியாளர்கள் அமர்தீப், கே.ஜி.கண்ணன், மாமன்ற உறுப்பினர் மாலதி உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரியில் நாஞ்சில் திருவிழா கண்காட்சி




கன்னியாகுமரி, பிப்.9

கன்னியாகுமரி மாவட்ட நபார்டு மற்றும் மதுரை வேளாண்மை தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மையம் இணைந்து நடத்தும் நாஞ்சில் திருவிழா கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, துவக்கி வைத்து பேசுகையில்

நாஞ்சில் திருவிழாவில் கலந்து கொள்வது ஒரு புது அனுபவமாக உள்ளது. நபார்டு வங்கியின் பெரும் முயற்சியினால் நம் இந்தியாவில் உற்பத்தியாக கூடிய பொருட்களை மதிப்பு கூட்டி சந்தைப்படுத்துவதில் மத்திய மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

நாஞ்சில் திருவிழா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக கன்னியாகுமரி காந்தி மண்டபம் அருகில் அமைந்துள்ள பூம்புகார் மையத்தில் 50 விற்பனை அரங்குகள் அமைத்து சுற்றுலாப்பயணிகளை பெரிதும் கவரும் வகையில் பணிகள் மேற்கொண்டுள்ள நபார்டு உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி என்பது சுற்றுலா பயணிகள் அதிகம் வரக்கூடிய ஒரு இடமாகும் இங்கு நீங்கள் விற்பனை மையத்தை அமைத்து இருப்பது மிகவும் மகிழ்ச்சியான ஒன்றாகும். கன்னியாகுமரிக்கு பொதுமக்கள், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு பத்து ஆயிரம் சுற்றுலா பயணிகளும், விடுமுறை நாட்கள் மற்றும் வாரத்தின் இறுதி நாட்களில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் நம்முடைய கன்னியாகுமரிக்கு வருகை தருகிறார்கள். இந்த சுற்றுலாத்தளத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட மகளிர் சுயஉதவிக்குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளீர்கள்.

மேலும் பல்வேறு மாநிலத்தில் இருந்து வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் நம்முடைய புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை வாங்கி செல்வார்கள். இதன் மூலம் நம்முடைய புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அறிமுகமாகும். குறிப்பாக மார்த்தாண்டம் தேன், கஸ்தூரி மஞ்சள், மிளகு, வாழைநார் கைவினைப் பொருட்கள், கடல் சிப்பிகளை வைத்து தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள், கன்னியாகுமரி மட்டி வாழை, கன்னியாகுமரி கிராம்பு உள்ளிட்ட பல்வேறு பொருட்களை சுய உதவிக் குழுக்களின் மூலம் உருவாக்கி விற்பனை செய்து வருகிறார்கள். சுய உதவி குழுக்களுக்கு அதிகமான கடன் கொடுக்கும் மாவட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்றாகும். புவிசார் குறியீடு பெற்ற பொருட்களை சுற்றுலாபயணிகள் அதிகம் வாங்கும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் தமிழ்நாடு மண்டல தலைமை பொது மேலாளர் ஆனந்த், சுரேஷ் ராமலிங்கம் (நபார்டு), நபார்டு வங்கியின் தமிழ்நாடு மண்டலப் பொது மேலாளர் திருமூ.சந்தானம், நாகர்கோவில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைமை மண்டல மேலாளர் வரப்பிரசாத், மதன கோபால், துறை அலுவலர்கள், சுயஉதவிக்குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



திண்டுக்கல், பிப்.9

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தலைமையில், திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள், கொழுமன்கொண்டான் ஊராட்சியில் 100 வீடுகளுடன் கட்டப்பட்டு வரும் புதிய சமத்துவபுரம் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள்.

தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொழுமன் கொண்டான் ஊராட்சியில் 100 வீடுகளுடன் புதியசமத்துவபுரம் கட்டுமான பணிகள் ரூ.7.97 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 100 வீடுகள் ரூ.6.20 கோடி மதிப்பீட்டிலும், சாலை பணிகள் ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நுழைவு வாயில் ரூ.4.34 இலட்சம் மதிப்பீட்டிலும், தந்தை பெரியார் சிலை ரூ.4.94 இலட்சம் மதிப்பீட்டிலும், வீட்டு குடிநீர் இணைப்பு பணிகள் ரூ.15.30 இலட்சம் மதிப்பீட்டிலும், மேல்நிலை குடிநீர் தொட்டி ரூ.16.75 இலட்சம் மதிப்பீட்டிலும், 50 தெருவிளக்குகள் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒரு நியாயவிலைக்கடை கட்டடம் ரூ.9.97 இலட்சம் மதிப்பீட்டிலும், சமுதாயக்கூடம் ரூ.49.50 இலட்சம் மதிப்பீட்டிலும், நூலகம் ரூ.14.85 இலட்சம் மதிப்பீட்டிலும், விளையாட்டு மைதானம் மற்றும் பூங்கா ரூ.7.42 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமத்துவபுரம் அமைப்பதற்காக முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், 15வது மானியக்குழு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, கனிமவள நிதி, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் போன்ற நிதிகளிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமத்துவபுரம் அமைப்பு பணிகள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 57 வீடுகள் மேற்கூரை வரை முடிவடைந்துள்ளன. தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல் தொப்பம்பட்டியில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, ஒட்டன்சத்திரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் ராஜாமணி, கீரனூர் பேரூராட்சித் தலைவர் கருப்பசாமி, முக்கிய பிரமுகர்கள் சத்தியபுவனா ராஜேந்திரன், கா.பொன்ராஜ், பி.சி.தங்கம் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## தலைநகர் டெல்லியில் நடந்த வாக்கோ இந்தியா ஓபன் கிக்பாக்ஸிங் சர்வதேச போட்டியில் சிவகங்கை கிக் பாக்ஸிங் வீரர்கள் சாதனை






செந்தில்வேலன்
தங்கம் வென்றவர்

சிவகங்கை பிப்.9

சிவகங்கை மாவட்டம் இந்தியாவின் தலைநகரான டெல்லியில் 'வாக்கோ இந்தியா' சார்பாக 4வது வாக்கோ இந்தியா ஓபன் கிக்பாக்ஸிங் சர்வதேச போட்டியில் பிப்ரவரி 01/02/25 முதல் 05/02/25 வரை (KD ஜாதவ் இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கத்தில் வெகு விமர்சயாக நடைபெற்றது மேலும் இப்போட்டி டிடி ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது இதில் இந்தியா, கஜகஸ்தான் ,குரோஷியா, பிரிட்டன், நேபாள் ,பின்லாந்து, உஸ்பேகிஸ்தான் ,எஸ்டோனியா, சுவிஷர்லண்ட் , தஜிக்கிஸ்தான் , இத்தாலி உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான வீரர் மற்றும் வீராங்கனை யினர் பங்கேற்றனர் இதில் தமிழ்நாட்டில் இருந்து இந்தியா சார்பாக 61 தமிழக வீரர்கள் தமிழ்நாடு அமெச்சூர் கிக் பாக்ஸிங் சங்கம் சார்பாக களமிறங்கினர் இப்போட்டியில் சிவகங்கை கிக் பாக்ஸிங் வீரர்கள் ஐந்து பேர் இந்தியா சார்பாக களம் இறங்கினர். இதில் இடையமேலூர் சினிலிகி பள்ளிமாணவர் செந்தில்வேலன் என்கிற மாணவர் (pointfighting) போட்டியில் +67 எடை பிரிவில் பங்கேற்று 2111 என்கிற புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்று இந்தியா விற்கு தங்க பதக்கமும் மற்றும் மவுண்ட் லிட்டரா பள்ளி மாணவர்கள் விஸ்வகிறீஷ் (point-fighting)போட்டியில் +47எடை பிரிவில் வெள்ளி பதக்கமும் மற்றும் ருட்வின் பிரபு (pointfight-ing) போட்டியில் 27 எடை பிரிவில் உஸ்பேக்கிஸ்தான் வீரருடன் சுறுசுறுப்பான அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெண்கல பதக்கத்தையும் வென்று இந்தியா விற்கும் தமிழ்நாட்டிற்கும் சிவகங்கை மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளனர் என்று பயிற்சியாளர் மற்றும்சிவகங்கை மாவட்ட அமெச்சூர் கிக்பாக்ஸிங் சங்க பொது செயலாளர் ச. குணசீலன், தலைவர் சதிஷ், துணை செயலாளர் சு. சித்ரா இணை பயிற்சியாளர் விக்னேஷ் மகிழ்ச்சியுடன் தெருவித்தனர் மேலும் வெற்றி வீரர்கள் வருகிற 10/02/25 திங்கள்கிழமை வர இருப்பதாகவும், வீரர்களின் வருகையை எதிர்பார்த்து பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஊர் மக்களும் காத்திருப்பதாகவும் தெருவித்தனர், மேலும் தமிழக கிக் பாக்ஸிங் அணி ஒவரல் சாம்பியன்ஷிப் கோப்பையையும் வென்று வரலாற்று சாதனை புரிந்துள்ளது, இது சிவகங்கை கிக்பாக்ஸிங் சங்கத்தின் இரண்டாவது சர்வதேச சாதனை பதக்கம் என்பது குறிப்பிடத் தக்கது.


## ‘உங்களுக்குள் சண்டையிடுங்கள்’ டெல்லி தேர்தல் முடிவை குறிப்பிட்டு உமர் அப்துல்லா கிண்டல்!

ஸ்ரீநகர், பிப்.9

டெல்லி தேர்தல் முடிவுகளில் பாஜக முன்னிலை பெற்றிருக்கும் சூழலில் காஷ்மீர் முதல்வரும், இண்டியா கூட்டணியின் அங்கத்தினருமான உமர் அப்துல்லா, ‘உங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ளுங்கள்’ என்று காங்கிரஸ், ஆம் ஆத்மியை கேலி செய்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் உமர் வெளியிட்டுள்ள பதிவில், “உங்களுக்குள் இன்னும் கொஞ்சம் சண்டையிட்டுக் கொள்ளுங்கள்” என்று தெரிவித்துள்ளார். மேலும் ஒரு பிரபலமான வீடியோ மீம்ஸையும் பகிர்ந்துள்ளார். அதில், “உங்கள் விருப்பப்படி சண்டையிட்டுக் கொள்ளுங்கள். ஒருவரை ஒருவர் தோல்வியுறச் செய்யுங்கள்.” என்று கூறப்பட்டுள்ளது.

பாஜகவுக்கு எதிரான எதிர்க் கட்சிகளின் இண்டியா கூட்டணிக்குள் அதிகரித்துவரும் பதற்றத்துக்கு இடையில் உமர் அப்துல்லா இவ்வாறு தெரிவித்துள்ளார். மக்களவைத் தேர்தலுக்கு பின்பு கூட்டணிகளுக்கு இடையே செயல்படாத தன்மை மற்றும் ஒற்றுமையின்மையை அவர் வெளிப்படையாக சாடியுள்ளார்.



முன்னதாக கூட்டணியின் நீண்ட நாள் நோக்கம் குறித்து முன்பு உமர் கேள்வி எழுப்பி இருந்தார். “இண்டியா கூட்டணி மக்களவைத் தேர்தலுக்கு மட்டும்தான் உருவாக்கப்பட்டது என்றால் அதனை முடித்துக் கொள்வது பற்றி முடிவெடுக்கலாம்.” என்று கடுமையாக விமர்சித்திருந்தார். தேசிய அளவில் எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் இடம்பெற்றிருந்தாலும், டெல்லி பேரவைத் தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுவது என்று ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸ் கட்சியும் முடிவெடுத்திருந்த நிலையில் உமர் இந்த விமர்சனத்தை முன்வைத்திருந்தார்.

இண்டியா கூட்டணியின் இருப்பு குறித்த தேசிய மாநாட்டுக் கட்சியின் செயல் தலைவர் உமர் அப்துல்லாவின் இந்தக் கேள்வி, கூட்டணிக்குள் ஏற்பட்டிருக்கும் விரிசலை நீக்குவதற்கானது மட்டுமில்லை, கூட்டணியின் ஒற்றுமையை விட சுயநலத்துக்கான கட்சிகளின் முன்னுரிமை குறித்த வெறுப்பு என்பதாக பார்க்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாதது டெல்லி தேர்தலில் பாஜகவின் முன்னிலை ஆதிக்கத்துக்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. டெல்லி வாக்கு எண்ணிக்கையின் ஆரம்ப போக்கில் ஆம் ஆத்மி கட்சியை பின்னுக்கு தள்ளிவிட்டு பாஜக முன்னிலை பெற்றிருப்பதுடன், 27 ஆண்டுகளுக்கு பின்பு தேசிய தலைநகரில் ஆட்சியை பிடிக்கும் பாதையில் முன்னேறி வருகிறது.

## 26 ஆண்டுகளுக்குப்பிறகு ஆட்சியை கைப்பற்றும் பாஜக; புதுடெல்லி தொகுதியில் கேஜ்ரிவால் அதிர்ச்சி தோல்வி!

புதுடெல்லி, பிப்.9

26 ஆண்டுகளுக்குப் பிறகு டெல்லியில் மீண்டும் ஆட்சி அமைக்கிறது பாஜக. மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 48 இடங்களைக் கைப்பற்றியது அக்கட்சி. அதேவேளையில், வெறும் 22 தொகுதிகளை மட்டும் வசமாக்கவுள்ள ஆம் ஆத்மி ஆட்சியை இழக்கிறது. முன்னாள் முதல்வர் கேஜ்ரிவால் தோல்வியைத் தழுவினார்.

கேஜ்ரிவால், சிசோடியா தோல்வி: தற்போதைய நிலவரப்படி ஆளும் ஆம் ஆத்மி கட்சி சார்பில் புதுடெல்லியில் போட்டியிட்ட கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான கேஜ்ரிவால், பாஜக வேட்பாளர் பர்வேஷ் சாஹிப் சிங்கிடம் தோல்வியுற்றார். அதேபோல் ஆம் ஆத்மி முக்கியத் தலைவர் மணீஷ் சிசோடியா ஆகியோரும் தோல்வியைத் தழுவினர். டெல்லி முதல்வராக பாஜக பர்வேஷ் சாஹிப் சிங்கையே தேர்வு செய்யும் என்று




கூறப்படுகிறது.

600 வாக்குகள் வித்தியாசத்தில் மணீஷ் சிசோடியா ஜங்புரா தொகுதியில் 600 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். தனது தோல்வி குறித்து அவர், “கட்சித் தொண்டர்கள் சிறப்பாகப் போராடினர்.

நாங்கள் அனைவரும் கடுமையாக உழைத்தோம். மக்களும் எங்களை ஆதரித்துள்ளனர். ஆனால், நான் 600 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தேன். வெற்றி பெற்ற வேட்பாளரை நான் வாழ்த்துகிறேன். அவர் தொகுதிக்காக உழைப்பார் என்று நம்புகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

26 ஆண்டுகளுக்குப் பின்னர்... டெல்லியில் அதிஷி தலைமையிலான ஆம் ஆத்மி ஆட்சி நடைபெறுகிறது. 70 உறுப்பினர்கள் கொண்ட சட்டப்பேரவைக்கு கடந்த 5ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில், 60.42 சதவீத வாக்குகள் பதிவாகின. டெல்லி பேரவை தேர்தலில் ஆம் ஆத்மி, பாஜக, காங்கிரஸ் இடையே மும்முனை போட்டி நிலவியது. 70 தொகுதிகளில் மொத்தம் 699 வேட்பாளர்கள் களம் கண்டனர். தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் அனைத்துமே பாஜக வெற்றி பெறும் என்றே கூறியிருந்தன.

இந்நிலையில் தற்போதைய நிலவரப்படி பாஜக 48 இடங்களை வசப்படுத்துகிறது. வெற்றிக்கு 36 தொகுதிகள் போதுமென்ற நிலையில் மாபெரும் வெற்றியை நோக்கி பாஜக முன்னேறி வருகிறது. இதனால், டெல்லி பாஜக அலுவலகம் உற்சாகமாகக் காணப்படுகிறது. 26 ஆண்டுகளுக்குப் பின்னர் டெல்லியை பாஜக கைப்பற்றியுள்ளது அக்கட்சியினரை கொண்டாட்ட மனநிலையில் ஆழ்த்தியுள்ளது.

## மகா கும்பமேளாவில் பிஹார் ஆளுநர் ஆரிப் முகம்மது கான் புனித நீராடல்!


புதுடெல்லி, பிப்.9

மகா கும்பமேளாவுக்கு வருகை தந்த பிஹார் ஆளுநர் ஆரிப் முகம்மது கான் புனித நீராடினார். ஆரத்தியிலும் கலந்துகொண்டவர், சனாதனக் கலாச்சாரத்தை பாராட்டினார்.

உ.பி.யின் பிரயாக்ராஜின் மகா கும்பமேளாவுக்கு பிஹாரின் ஆளுநர் ஆரிப் முகம்மது கான் வருகை புரிந்திருந்தார். இவரை உ.பி அரசின் சார்பில் அம்மாநில தொழில்துறை அமைச்சரான நந்து கோபால் குப்தா நந்தி வரவேற்றார். நேராக திரிவேணி சங்கமத்தில் தன் புனித நீராடலை அவர் முடித்தார். முக்கூடலில் நடைபெற்ற ஆரத்தி பூசையிலும் ஆளுநர் ஆரீப் முகம்மது கான் கலந்து கொண்டார்.

பிறகு கரையிலுள்ள சுவாமி பரமானந்த் நிகேதன் முகாமுக்கு ஆளுநர் ஆரிப் சென்றார். முகாமிலிருந்த சிந்தானந்தா சரஸ்வதி சுவாமிகள், ஆளுநர் ஆரிப் முகம்மது கானுடன் ஆன்மிகக் கலந்துரையாடல் நடத்தினார். இதில் ஆளுநர்





ஆரிப்புக்கு இந்து கலாச்சாரம், கங்கை நதி பாதுகாப்பு மற்றும் கும்பமேளாவின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பிறகு உ.பி அரசின் சிறப்பு பாதுகாப்பு படகில் முக்கூடலில் பயணித்தார் ஆளுநர் ஆரிப்.

இது குறித்து செய்தியாளர்களிடம் ஆளுநர் ஆரிப் கூறுகையில், ‘இந்தயக் கலாச்சாரத்தின் சனாதனத்தை நாம் எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டும். இதனால், நம்மிடையே உள்ள அனைத்து வேற்றுமைகளும் மறைந்து விடும். இந்தியாவின் ஆன்மிகப் பாரம்பரியத்தின் பெருமை மகா கும்பமேளாவில் தெரிகிறது. இந்த நிகழ்வின் மூலம் அமைதி, ஒற்றுமை மற்றும் சர்வதேசத்துக்கானப் சமூகப் பணியை காட்டுகிறது’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

மகா கும்பமேளாவில் இதுவரை 40 கோடிக்கும் அதிகமானோர் வருகை புரிந்துள்ளனர். இந்த எண்ணிக்கை பிப்ரவரி 26 ஆம் தேதிக்குள் எதிர்பார்த்ததை விட அதிக எண்ணிக்கையை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் முடிவுகள்: திமுக வேட்பாளர் வெற்றி - தொண்டர்கள் உற்சாக கொண்டாட்டம்

ஈரோடு, பிப்.9

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. முதலில் தபால் வாக்குகளையும், அதனைத் தொடர்ந்து மின்னணு இயந்திரத்தில் பதிவான வாக்குகளையும் எண்ணும் பணி நடக்கும் நிலையில், முழுமையான முடிவுகள் வெளியாகின. இந்நிலையில், 7வது சுற்று முடிவில் திமுக வேட்பாளர் 32,275 வாக்குகள் அதிகம் பெற்று முன்னிலை வகிக்கிறார்

முன்னிலை நிலவரம்: 7வது சுற்று முடிவில் வி.சி.சந்திரகுமார் (திமுக) 49,251, சீதாலட்சுமி (நாதக) 10,587, நோட்டா 2,351, 7வது சுற்று முடிவில் திமுக வேட்பாளர் 38,664 வாக்குகள் அதிகம் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் மறைவைத் தொடர்ந்து, இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலை அதிமுக, பாஜக, தேமுதிக, தவெக உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்த நிலையில், இண்டியா கூட்டணி சார்பில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சியின் சார்பில்



மா.கி.சீதாலட்சுமி, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 13 வேட்பாளர்கள் மற்றும் 31 சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு கடந்த பிப்ரவரி 5ம் தேதி நடந்தது. இத்தேர்தலில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக, 53 இடங்களில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நிறைவில், 74 ஆயிரத்து 260 ஆண்கள், 80 ஆயிரத்து 376 பெண் வாக்காளர்கள், 21 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 657 வாக்காளர்கள் வாக்களித்தனர். வாக்குப்பதிவு சதவீதம் 67.97.

இத்துடன், தபால் வாக்குகள், 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் என, 246 பேரும், ராணுவத்தில் பணி செய்யும் 4 பேர், சிறையில் உள்ள, ஒருவர் என, 251 வாக்குகள் பதிவாகி உள்ளது.

வாக்குப்பதிவு முடிந்ததும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான சித்தோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டது. வாக்கு எண்ணும் மையத்தில் 76 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டதோடு, துணை ராணுவத்தினர் உட்பட 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

காலை 8 மணிக்கு தொடங்கியது.. இந்நிலையில், ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சியருமான ராஜ கோபால் சுன்கரா தலைமையில், தேர்தல் பொது பார்வையாளர் அஜய் குமார் குப்தா, எஸ்பி ஜவகர், தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னிலையில் பாதுகாப்பு அறையின் சீல் இன்று (8ம் தேதி) காலை 8 மணிக்கு திறக்கப்பட்டது.

ஈரோடு கிழக்கில் பதிவான தபால் வாக்குகள் எண்ணும் பணி காலை 8 மணிக்கு தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி காலை 8.30 மணிக்கும் தொடங்கியது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 14 மேஜைகளில் எண்ணப்படுகிறது. தபால் வாக்கு ஒரு மேஜையில் எண்ணப்பட்டது.

ஒவ்வொரு மேஜையிலும், ஒரு கண்காணிப்பாளர் உதவியாளர், நுண் பார்வையாளர் என மொத்தம் 51 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மொத்தம், 17 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், ஒரு மின்னணு இயந்திரத்தில் வாக்கு எண்ணிக்கை முடிய சராசரியாக 25 நிமிடங்கள் வரை நேரம் பிடிக்கும் என தேர்தல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

## உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசையில் சிங்கப்பூர் முதலிடம்; 80வது இடத்தில் இந்தியா!

புதுடெல்லி, பிப்.9

சிங்கப்பூர் உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தப் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் விசா இல்லாமல் 193 இடங்களுக்குப் பயணிக்க முடியும். இந்தியாவுக்கு என்ன இடம் என்பது குறித்தும் காண்போம்.

உலகின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசைப் பட்டியல் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது. ஒரு நாட்டின் பாஸ்போர்ட் மூலம் எத்தனை நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்கலாம் என்பதன் அடிப்படையில் இந்த தரவரிசை நிர்ணயிக்கப்படுகிறது. இதுகுறித்த பட்டியலை ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் தற்போது வெளியிட்டுள்ளது.

அந்தப் பட்டியலில், உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட்கள் பட்டியலில், சிங்கப்பூர் முதலிடத்திலும், ஜப்பான் மற்றும் தென் கொரியா




இரண்டாவது இடத்திலும் உள்ளன. சிங்கப்பூர் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் விசா இல்லாமல் 193 இடங்களுக்குப் பயணிக்க முடியும். ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய இரண்டு நாடுகளின் பாஸ்போர்ட்டுகளை வைத்து விசா இல்லாமலே 190 நாடுகளுக்குச் செல்லலாம்.

டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட ஏழு நாடுகள் அப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளன. இந்த நாட்டின் பாஸ்போர்ட்டுகளை வைத்திருப்பவர்கள் விசா இல்லாமல் 189 இடங்களுக்குப் பயணிக்க முடியும். அமெரிக்கா இப்போது 9வது இடத்தில் உள்ளது. அதாவது, விசா இல்லாமல் 183 நாடுகளுக்கு பயணிக்க முடியும்.

ஆப்கானிஸ்தான் 25 நாடுகளுக்கு மட்டுமே செல்லக் கூடிய கடைசி 99வது இடத்தில் உள்ளது. இதற்கிடையில், சிரியா 98வது இடத்திலும் (27 நாடுகள்), ஈராக் 97வது இடத்திலும் (30 நாடுகள்) உள்ளது.

இந்த ஆண்டு பட்டியலில் இந்தியா 80வது இடத்தில், அதாவது 56 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க அனுமதி உள்ளது. இவ்விடத்தை அல்ஜீரியா, ஈக்வடோரியல் கினியா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்கிறது இந்தியா. மியான்மர் 88வது இடத்திலும், இலங்கை 91வது இடத்திலும் உள்ளது.

## பெரியார் குறித்து விமர்சனத்தால் வாக்குகள் குறையவில்லை! நாதக வேட்பாளர்

ஈரோடு, பிப்.9

“பெரியார் குறித்து சீமான் விமர்சனம் செய்ததால் வாக்குகள் குறையவில்லை” என்று ஈரோடு கிழக்கு தொகுதி நாதக வேட்பாளர் சீதாலட்சுமி கூறியுள்ளார். ஈரோடு இடைத்தேர்தலை 2026ம் ஆண்டு தேர்தலுக்கான முன்னோட்டமாக பார்த்ததால், திமுக தலைமைக்கு அச்சம் வந்துள்ளது. எனவே, 2026ம் ஆண்டு தேர்தலில் இந்த மண்ணில் திமுக கடுமையான போராட வேண்டியிருக்கும்.

நாம் தமிழர் கட்சிக்கு கிடைத்துள்ள வாக்குகள் ஒருபோதும் எதிர்காலத்தில் வேறு கட்சிக்கு போகாது. திமுகவுக்கு எதிரான வாக்குகளும், நாம் தமிழர் கட்சிக்கு விழுந்துள்ளன. பெரியார் குறித்து சீமான் விமர்சனம் செய்ததால் வாக்குகள் குறையவில்லை. பெரியார் குறித்து சீமான் பேசியது புரிதல் அடிப்படையில் சரியாக இருப்பதால் தான் நாம் தமிழர் கட்சிக்கு வாக்குகள் விழுந்துள்ளன. நாம் தமிழர் கட்சி மக்களை நம்பிக்கை வைத்து தேர்தலில் நின்றது,” என்று அவர் கூறினார். ஒவ்வொரு தேர்தலின் தோல்வியின்போதும் நாதக வேட்பாளர்களும் சீமானும் இதையேதான் சொல்லி வருகிறார்கள்.

## “சட்டப்பேரவைத் தேர்தலுக்கும் இண்டியா கூட்டணி ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்” திருமாவளவன்

மதுரை, பிப்.9

“இண்டியா கூட்டணி கட்டுக்கோப்பாக இல்லை. ஆம் ஆத்மி, காங்கிரஸ் ஒற்றுமையாக இந்த தேர்தலை சந்திக்கவில்லை. இண்டியா கூட்டணித் தலைவர்கள் இதுகுறித்து விரைவில் கலந்தாய்வு செய்ய வேண்டும். இண்டியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் ஈகோ பிரச்சினைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு, நாட்டையும் மக்களையும் காப்பாற்றுகிற திசையில் சிந்திக்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலுக்கு மட்டுமல்ல, சட்டப்பேரவைத் தேர்தலுக்கும் இண்டியா கூட்டணி ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய தேவை உள்ளது” என்று விசிக தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் விசிக தலைவர் திருமாவளவன் இன்று (பிப்.8) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: “டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில், பாஜக முன்னிலையில் இருப்பது மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது. ஆம் ஆத்மி இந்தளவுக்கு பின்னடைவைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. டெல்லியில் பாஜக ஆட்சி



அமையுமேயானால் அது தேசத்துக்கான ஒரு பின்னடைவாகத்தான் கருத வேண்டியிருக்கிறது.

நியாயமான முறையில் டெல்லியில் நடந்திருக்கும் தேர்தல் நடந்திருக்குமா? என்ற ஐயத்தை எழுப்புகிறது. இண்டியா கூட்டணி கட்டுக்கோப்பாக இல்லை. ஆம் ஆத்மி, காங்கிரஸ் ஒற்றுமையாக இந்த தேர்தலை சந்திக்கவில்லை. இண்டியா கூட்டணித் தலைவர்கள் இதுகுறித்து விரைவில் கலந்தாய்வு செய்ய வேண்டும். இண்டியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் ஈகோ பிரச்சினைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு, நாட்டையும் மக்களையும் காப்பாற்றுகிற திசையில் சிந்திக்க வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு மட்டுமல்ல, சட்டப்பேரவைத் தேர்தலுக்கும் இண்டியா கூட்டணி ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய தேவை உள்ளது. எனவே, டெல்லி தேர்தல் முடிவுகளை ஒரு படிப்பினையாக கொண்டு காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி, சமாஜ்வாதி, ஆகிய கட்சிகள் இதுகுறித்து தீவிரமாக சிந்திக்க வேண்டும் என்று விசிக வேண்டுகோள் விடுக்கிறது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் எதிர்பார்த்தவாறு, திமுக மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது. எதிர்பார்த்த வெற்றியை திமுக கூட்டணி, திமுக பெறும் என்று நம்புகிறேன்” என்று அவர்

## திண்டுக்கல் டிஐஜி வந்திதா பாண்டே மத்திய அரசு பணிக்கு மாற்றம்



சென்னை, பிப்.9

உத்தரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜை சேர்ந்தவர் வந்திதா பாண்டே. தமிழக கேடரில் 2011ம் ஆண்டு ஐபிஎஸ் ஆக தேர்வு பெற்று தமிழகத்தில் பணியாற்றி வருகிறார். 2016ல் எஸ்பியாக பதவி உயர்வு பெற்று கரூர் மாவட்டத்தில் பணியாற்றியபோது, சட்டப்பேரவை தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதற்காக, பிரபல அரசியல் பிரமுகரின் பினாமி வீட்டில் வைக்கப்பட்டிருந்த ரூ.4 கோடியை பறிமுதல் செய்தார்.

அதே தேர்தலில் கண்டெய்னரில் வந்த ரூ.570 கோடியை மடக்கி பிடித்ததில் இவர் முக்கிய பங்காற்றினார். திருச்சி டிஐஜி வருண் குமாரை திருமணம் செய்து கொண்ட வந்திதா பாண்டே, தற்போது திண்டுக்கல் டிஐஜியாக பணியாற்றி வருகிறார். இந்நிலையில், மத்திய இளைஞர் விவகாரத்துறை இயக்குநராக வந்திதா பாண்டேவை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161